**இந்திய பசுபிக் பிராந்தியக் கட்டடக்கலை - இந்து சமுத்திர மாநாடு 2017இல் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் ஆற்றிய உரை, கொழும்பு - இலங்கை, செப்ரம்பர் 1, 2017**

இத்தகையதொரு மாநாட்டினை ஒழுங்கமைப்பதில் இந்திய மன்றம் மற்றும் அதனுடைய பங்காளிகளான சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளினதும் தலைமைத்துவத்தினை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றேன்.

ஓர் இந்திய பசுபிக் பிராந்தியத்தின் சக்தியாக ஐக்கிய அமெரிக்கா எப்போதும் இருக்கும் என்ற ஐக்கிய அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் ஒரு நீண்டகால அம்சத்தினை மறுபரிசீலனை செய்வதன் மூலம் நான் இதனை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கின்றேன். சமுத்திரத்தினைச் சூழவுள்ள நாடுகளுடன் எமது நெருக்கமான இருதரப்பு உறவுகள் மற்றும் பங்காளித்துவங்களுடன், மனாமா, டார்வின், டியேகோ கார்சியா, சிங்கப்பூர் மற்றும் பிராந்தியத்தின் ஏனைய பகுதிகளில் எமது இருப்பினை பெரிதும் பரவலாக்கியுள்ளன.

ஏழு தசாப்தங்களிற்கும் மேலாக, கிழக்கு ஆபிரிக்காவின் கரையோரங்களிலிருந்து அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை வரைக்குமான இந்தப் பரந்த விரிவாக்கம் முழுவதும் தேவைப்படுகின்ற இந்த வேறுபாடான தனித்தன்மைகளை நாம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளோம். உலகின் வர்த்தக மற்றும் சக்தி விநியோகத்தில் பெருமளவினைக் கொண்டுள்ள மலாக்கா முதல் ஹோர்முஷ் வரையும் தொடரும் மற்றும் இலங்கையின் தென்முனையைச் சூழவுள்ள கடலோரா தொடர்பாடல்கள் உள்ளடங்கலாக இனிவரும் தசாப்தங்களிலும் இதில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை.

இந்த ஆற்றல் கொண்ட பிராந்தியத்திற்கு அமெரிக்காவின் இணைப்பானது புதிய ஒன்றல்ல. இரு நூற்றாண்டுகளிற்கு முன்னர் புதிய இங்கிலாந்திலிருந்து கப்பல்கள் பொஸ்ரனுக்கும் கல்கத்தாவிற்குமிடையில் இந்து சமுத்திரத்தின் வர்த்தகக் கடல் மார்க்கமாக வாசனைத்திரவியங்கள், தேயிலை மற்றும் பனிக்கட்டிகளையும் கூட எடுத்துக் கொண்டு சென்றன.

இன்று இந்த நிலை வேகமாக முன்னேற்றமடைந்து, இந்தப் பிராந்தியத்தில் எமது கூட்டாண்மை மற்றும் பகிரப்படும் மூலோபாய நலன்களை எப்போதும் நிரந்தரமாகக் கொண்டுள்ளன. அடுத்து வரும் சில நிமிடங்களில் நான் இந்து சமுத்திரத்தின் பக்கமும் அதேபோல் ஐக்கிய அமெரிக்காவின் ஈடுபாடு மற்றும் இராஜதந்திரச் செயலாண்மைத் திறத்தின் பக்கமும் எனது பார்வையைச் செலுத்த விரும்புகின்றேன்.

முதலாவதாக, பொருளாதார வளர்ச்சி, வெளிப்படையான அபிவிருத்தி மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு ஆகியவற்றினை மேம்படுத்தும் இந்து சமுத்திரத்திற்கான பொதுவான ஒரு தூரநோக்கு எம்மிடம் இருக்கின்றது. பிராந்தியத்தின் குடிமக்களுக்கும் பொறுப்புடைமைகளுக்கும் முன்னுரிமை அளித்தல், திறந்த சந்தை, நிலையான நன்மைகளை வழங்குதல் ஆகிய பிராந்தியரீதியான முன்னெடுப்புக்கள் யாவும் மிகவும் நிலையானதாக இருக்கும்.

இரண்டாவதாக, இந்து சமுத்திரத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும், அதேபோல் மனிதாபிமான மற்றும் சுற்றுச் சூழல் பேரழிவுகளுக்குப் பதிலளிப்பதற்கும் நாடுகள் திறம்படச் செயலாற்றக்கூடிய வகையில் இருக்க வேண்டும். இத்தகைய மனோபலத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பயிற்சியின் மூலம் இந்தச் சிக்கலான பிராந்தியத்தில் பாதுகாப்புச் சுமையைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

இறுதியாக, வழிநடத்தும் சுதந்திரம் மற்றும் சிக்கல்களின் அமைதியான தீர்வு ஆகியவற்றினை உள்ளடக்கும் சர்வதேச நெறிமுறைகளுக்கு ஆதரவளிக்கும் ஒரு கொள்கையான பிராந்தியக் கட்டிடக்கலை அமைப்பினை நாம் ஆதரிக்க வேண்டும். அனைத்து நாடுகளும் சுதந்திரமாகப் பறந்து புறப்பட்டுச் சென்று சர்வதேசச் சட்டம் அனுமதிக்கும் இடங்களில் சென்று செயற்பட அவற்றிற்கு உரிமை உண்டு.

முதலில் பொருளாதார விதிமுறைகளுடன் ஆரம்பிக்கலாம். இந்து சமுத்திரமானது உலகளாவிய வர்த்தகம் மற்றும் வாணிபம் ஆகியவற்றின் அடித்தளத்தில் உள்ளதனால் இதனுடைய கடல் மாக்கத்தின் வழியாகப் பயணிக்கும் வகையில் உலகில் உள்ள மூன்றில் இரண்டு பங்கு உலக எண்ணெய் வர்த்தகமும் கிட்டத்தட்ட உலகின் அரைவாசியான 90,000 வணிகக் கப்பல்களும் பயணிக்கும் பாதையாக இது உள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் பூமியில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் சிலவும், உலகின் மக்கள் சனத்தொகையில் கால்வாசிப் பகுதியும் உள்ளதுடன், அவர்களில் ஐநூறு மில்லியன் பேர் வரையில் இன்னும் நம்பகத்தன்மை வாய்ந்த அதிகாரத்தைப் பெறாத நிலையில் உள்ளனர்.

பொருளாதார ஒத்துழைப்பினை மேம்படுத்துதல் என்பது நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று நாம் நம்புகின்றோம். உதாரணமாக, தெற்கு மற்றும் தென்கிழக்காசியா ஐம்பது சதவீதத்தினால் தீர்வைகள் அற்ற தடைகளினைக் குஜறத்திருந்தால், ஓர் இலட்சியமான ஆனால் அடையக்கூடிய இலக்கினை அதிகரிக்கப்பட்ட உள்நாட்டுப் பிராந்தியங்களிற்கு இடையிலான வர்த்தகம் 2030 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 568 பில்லியன் டொலருக்கு நிகராக இருக்கும்.

ஏற்கனவே, அமெரிக்க நிறுவனங்கள் இப்பகுதி முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கின்றன, குடிபானப் போத்தல்களிலிருந்து விமானத்தின் உதிரிப் பாகங்கள் வரைக்குமான ஒவ்வொன்றினையும் இவை விநியோகம் செய்கின்றன. இந்தியாவில் மட்டும் அறுநூறிற்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் கடந்த இரண்டு வருடங்களில் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஐநூறு சதவீதத்தினால் அதிகரிக்கும் வகையில் பங்களிப்புச் செய்துள்ளது. நேபாளத்தின் போக்குவரத்து மற்றும் எரிபொருள் வளத்துறைகளில் அறுநூறு மில்லியன் டொலரினை முதலீடு செய்வதற்கு அமெரிக்கா முதலீடு செய்கின்றது. இது இந்து சமுத்திரத்தில் நமது வர்த்தக உறவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்பதற்கு இன்னுமொரு அறிகுறியாக விளங்குகின்றது.

வெளிப்படையான வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவித்தல், எரிபொருள் வளச்சக்தி உட்கட்டமைப்பினை உருவாக்குதல், வளங்களுடனான வளர்ந்து வரும் தொழில்

முனைவோர்கள் தமது கருத்துக்களை மேம்படுத்துவதற்காக அவர்களை இணைத்தல் ஆகியவற்றுடன் சட்டபூர்வமான மற்றும் ஒழுங்குமுறையான ஆட்சியை மேம்படுத்துவதற்கு தெற்காசிய நாடுகளுடன் நாம் பங்குதாரர்களாக இருப்போம். அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் ஜூன் மாதத்தில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் இதைப் பற்றிச் சுட்டிக்காட்டியமையினால் இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் வெளிப்படையான உட்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் பொறுப்புக் கடன் நிதி முறைகள் மூலம் பிராந்தியப் பொருளாதார இணைப்புக்களை வளர்ப்பதாக உறுதி அளித்துள்ளன.

சட்டவிரோதமான, அறிவித்தல் விடுக்கப்படாத மற்றும் ஒழுங்குமுறையற்ற விதத்தில் மீன்பிடிக்கும் செயற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் உலகெங்கிலும் உள்ள கடல்சார் பொருளாதாரங்களை அச்சுறுத்தும் சிக்கல்களை எதிர்கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்கா பாதுகாப்பான ஓசோன் வலையமைப்பு மூலம் தனது பங்குதாரர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், வன்செயல்களையும் மீறல்களையும் கண்டறிதல், சட்டவிரோமதான செயல்களில் ஈடுபடுபவர்களையும் சம்பந்தப்படுபவர்களையும் தண்டித்தல் ஆகிய ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை இந்த முயற்சி ஊக்குவிக்கின்றது. உலகெங்கிலும் இருந்து சுமார் நாற்பதிற்கும் மேற்பட்ட பங்குதாரர்கள் பாதுகாப்பான ஓசோன் வலையமைப்பில் இணைந்துள்ளனர். அத்துடன் ஒவ்வொரு நாட்டினையும் இந்தப் பாதுகாப்பான வலையமைப்பில் சேர்ந்து கொள்ளுமாறு நாம் இத்தருணத்தில் அழைப்பு விடுக்கின்றோம்.

தெற்காசியாவில், எமது பிராந்தியப் பங்குதாரர்கள் தமது பகுதிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்தியா தனது கிழக்குக் கொள்கையின் மூலம் அதனுடைய அயல் நாடுகளுடன் வலுவான வர்த்தகம் மற்றும் உட்கட்டமைப்பு ரீதியான உறவுகளைக் கட்டி எழுப்புகின்றது. ஓர் உதாரணத்தில் இதனை எடுத்துக் கூறினால் பங்களாதேஷ், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் சரக்குகள் மற்றும் மக்கள் தமது எல்லைகளை இலகுவாகக் கடந்து செல்வதனை அனுமதிப்பதற்காக மோட்டார் வாகன ஒப்பந்தம் ஒன்றினை நடைமுறையில் செயற்படுத்துகின்றன. இங்கு கொழும்பில், எமது கொள்கலன் பாதுகாப்பு முயற்சியானது, கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு உதவுகின்றது. தெற்காசியாவில் பொருட்கள் ஏற்றி மாற்றுவதற்கான முக்கியமான இடமாக மாறுவதற்கு உதவுகின்றது.

பல்துறைத் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரக் கூட்டுறவிற்கான வங்காள விரிகுடாவின் முன்னெடுப்பு (BIMSTEC) என்ற செய்றபாட்டில் நாம் கூட அத்தகைய முன்னேற்றகரமான செய்றபாட்டினைக் கண்டு பாராட்டுகின்றோம். அத்துடன் அடுத்த BIMSTEC உச்சி மாநாட்டிற்கு முன்னதாக மின்சார வசதிகள் இணைப்பு மற்றும் போக்குவரத்து மீதான ஒப்பந்தங்களையும் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இப்பிராந்தியத்தில் முன் ஒருபோதும் இல்லாத வாய்ப்புக் கிடைத்தாலும், பயங்கரவாதம், நாடு கடந்த குற்றங்கள், ஆட்கடத்தல்கள் மற்றும் சட்டவிரோதமான மருந்துகள் உட்பட பல எண்ணற்ற பாதுகாப்புத் தொடர்பான சவால்களை எதிர்கொள்கின்றது.

இந்தச் சவால்களை எதிர்த்துப் போராடுவதற்கு, ஐக்கிய அமெரிக்கா பிராந்தியப் பங்குதாரர்களிற்கு இடையில் உளவுத்துறை சார்ந்த பகிர்வுகளை மேம்படுத்துதல் மற்றும் கிராமிய சமூகக் கொள்கைகள் போன்ற பகுதிகளில் மனோபலத்தினைக் கட்டியெழுப்புவதனை மேம்படுத்துதல், போதைப் பொருள் பாவனை எதிர்ப்பு, விமானப் பாதுகாப்பு மற்றும் தடயவியல் பகுப்பாய்வு போன்ற பகுதிகளில் திறன்களையும் ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்ளும் செயற்பாட்டினை மேம்படுத்த முயல்கின்றது. கடல்மார்க்கம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாட்டின் மீது ஈடுபாட்டினை விரிவாக்குவதும் ஒரு முக்கிய தேவையாக உள்ளது. அதிகரிப்பு முறையில் சவாலாக விளங்கும் கடல்சார் சூழலில் நம்பகரமான தகவல்களின் பகிர்வும் பாரிய ஒத்துழைப்பு ஒன்றிற்கான ஓர் அடித்தளம் ஆகும்.

நமது இந்து சமுத்திரத்தில் உள்ள பங்குதாரர்களின் கடலோரப் பாதுகாப்புப் படையினரின் மனோபலத்தினைக கட்டியெழுப்ப அமெரிக்கா உறுதியளித்துள்ளது. இன்று முதல் இரு வாரங்களிற்குள் கடல்சார் மாசு தடுப்பு, சட்ட அமுலாக்கம், தேடல் மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் ஏனைய பல சிக்கல்களுக்கான ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்காக யப்பான் உலகக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் பொது மன்றக் கருத்தரங்கு ஒன்றினை நடத்துகின்றது. இப் பொதுக் கருத்தரங்கில் ஒவ்வொரு நாடும் கலந்து கொள்ளப்படுவதற்கு ஊக்கவிக்கப்படுகின்றது.

கடற்படை ஒத்துழைப்பினை விரிவாக்குதல் என்பது அமெரிக்காவின் மற்றுமொரு முன்னுரிமைச் செயற்பாடு ஆகும். ஜுலை மாதம் அமெரிக்க - இந்திய - யப்பான் மலபார் கடற்படைப் பயிற்சிக்காக பத்தாயிரம் ஆளணி நபர்களை சம்பந்தப்படுத்தி பயிற்சிநெறி ஒன்றினை நடத்தியமை இன்று வரை எமது பாரிய மற்றும் சிக்கலான ஒரு செயற்பாடாக உள்ளது.

நாம் இலங்கையுடன் இலங்கைக் கடற்படையினருக்கும் எமது கடற்படையினருக்கும் இடையிலான உறவினை விரிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாவது கடற்படைப் பயிற்சியைக் குறிப்பிடலாம். பங்களாதேஷ் நாட்டுடன், தென்கிழக்கு ஆசிய ஒத்துழைப்பு மற்றும் பயிற்சிநெறித் தொடர் போன்ற தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் எமது தொடர்ச்சியான ஈடுபாட்டினை நாம் மதிக்கின்றோம்.

அந்த நாள் மிக நீண்ட தொலைவில் இல்லை என்பதனை நாம் நம்புகின்றோம். இந்தப் பிராந்தியத்தின் அனைத்துக் கடற்படைகளும் இணைந்து பயிற்சியில் கலந்து கொள்ளவும் கூட்டுத் திறனை வளர்ப்பதற்காகவும் மற்றும் சர்வதேசரீதியான தராதரங்களை நிலைநிறுத்துவதற்காகவும் கடல்சார் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் முடியும் என நாம் நம்புகின்றோம்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் எமது பகிரப்பட்டுள்ள குறிக்கோளினை உணர்ந்து கொள்வதற்காக இது திறந்த நிலையில் உள்ளது. கொள்கை ரீதியாகவும் நெகிழ்வானதாகவும் உள்ளது. இருதரப்பு மற்றும் பன்முக ஒத்துழைப்பிற்கான வலுவானதொரு பிராந்தியக் கட்டமைப்பினை நாம் பெற வேண்டியது அவசியமாகின்றது. ஒரு மாநிலத்தில் அனைத்து நாடுகளும் சொல்வது, தீர்மானங்களை மேற்கொள்வது

மற்றும் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. பிராந்தியப் பங்காளிகள் ஒரு பொதுவான பார்வையினைக் கடைப்பிடிக்க வேண்டும்:

- கடல் பாதுகாப்புச் சட்டத்தில் பிரதிபலிக்கப்பட்டுள்ளபடி சர்வதேசச் சட்டத்தினை மதித்தல்.
- தெற்காசியாவிற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையில் ஒரு பொருளாதார, அரசியல் மற்றும் சமூக இணைப்புகளை ஆதரித்தல்.
- அனைத்து இந்து சமுத்திரத்தின் பங்குதாரர்களுக்கும் கடற்படைப் பயிற்சிநெறிகள் மூலம் பிராந்தியத்தின் மனிதாபிமான மற்றும் பேரழிவு நிவாரணத் திறன்களை மேம்படுத்துதல் மற்றும்,
- இந்து சமுத்திரப் பொருளாதாரத்தைத் தாராளமயமாக்குதல், போட்டிச் சந்தை, அணுகக்கூடிய மருத்துவம் மற்றும் கல்வி வசதிகளை ஆர்வமாக ஏற்றுக் கொள்வதற்கு ஊக்கப்படுத்துதல்.

கடந்த மாதம், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அவர்கள் "தெற்காசியாவிலும் பரந்துபட்ட இந்திய பசுபிக் பிராந்தியத்திலும் சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் எமது பகிரப்பட்டுள்ள நோக்கங்களைப் பின்பற்றுவதில் உறுதியாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அவர்களும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் அறிவித்த இந்தியப் பெருஞ்சமுத்திரத்தின் ஒரு பொதுவான கொள்கைகளை இந்தத் தூரநோக்கு உருவாக்குகின்றது. ஒரு பொதுவான தரிசனத்திற்கான எங்கள் விருப்பு இந்தப் பிராந்தியத்தின் சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஊடுருவும் சுதந்திரத்திற்குமான எமது பகிரப்பட்ட இலக்குகளை ஊக்குவித்தல் மற்றும் இந்து சமுத்திரப் பரப்பில் ஒரு நிலையான மற்றும் திறந்த கட்டிடக்கலையினை ஊக்குவித்தல் ஆகியவற்றில் எமது உறுதியான பொறுப்புடைமையினைக் குறித்து நிற்கின்றது.

இந்தப் பொதுவானதொரு கூட்டு முயற்சியில் இங்கு இணைந்து கொள்வதற்காக நாம் ஒவ்வொரு நாட்டினையும் இத்தருணத்தில் அழைக்கின்றோம். மேலும், நமது கூட்டுத் தலைமைத்துவத்தின் ஊடாக உலகின் ஏனைய பகுதிகளுக்கும் நாம் ஒரு முன்மாதிரியாக இருக்க முடியும்.

நன்றி! வணக்கம்!